Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 2044/2025 |
| Police station | : | நெல்லிக்குப்பம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW1 / PW1 |
| Name | : | கிருஷ்ணகுமார் தலைமை காவலர் 1412 |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 09.06.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.நடைமுறை சட்டம் பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது).

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 21.03.2019 ம்தேதி மாலை 16.30 மணியளவில் நான் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்தபோது உதவி ஆய்வாளர் திரு. கணபதி மற்றும் காவலர் திரு. அரவிந்தன் 898 ஆகியோர்கள் ரோந்து பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி சுந்தரவாண்டி மெயின்ரோட்டில் சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது கெடிலம் ஆற்றங்கரையில் மணல்

கடத்தப்போவதாக உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சுந்தரவாண்டி பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது இரட்டை மாட்டு வண்டியில் வந்தவர்கள் எங்களை பார்த்ததும் இறங்கி ஓடிவிட்டார்கள். நாங்கள் அருகில் சென்று சோதனை செய்து பார்த்தபோது இரட்டை மாட்டு டணயர் வண்டியில் 1/4 யூனிட் ஆற்று மணல் இருந்தது. நாங்கள் வண்டியை சோதனை செய்து பார்த்தபோது அதில் எந்தவொரு அரசு உரிமமோ, ரசீதோ இல்லை என்பது தெரியவந்தது. ஓடிப்போன நபர்களின் பெயர் விலாசம் ஆகியவற்றை உதவி ஆய்வாளர் விசாரித்து ஓட்டேரி மாரியம்மன் கோவிலை சேர்ந்த பாலகிருஷ்ணன் மகன் கமலக்கண்ணன் என்று தெரியவந்தது. எனவே அன்றைய தினம் 16.45 மணிக்கு பொது சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தினால் நானும், என்னுடன் வந்த காவலர் திரு. அரவிந்தன் முன்னிலையில் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து மேற்படி எதிரி கொண்டு வந்து 1/4 யூனிட் கெடிலம் ஆற்று மணல் மற்றும் இரண்டை மாட்டு டயர் வண்டியையும் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் நானும் என்னுடன் வந்த தலைமை காவலர் திரு. அரவிந்தன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் சென்று அன்றைய தினம் 18.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தோம். உதவி ஆய்வாளருக்கு அந்த சமயத்தில் நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னையும் விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

சம்பவத்தன்று நாங்கள் எந்த திசையில் இருந்து எந்த திசையில் சென்றபோது எதிரி எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி வந்தார் என்று உதவி ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல்

மகசரில் சம்பவ இடமானது எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. சுந்தரவாண்டி பஸ் ஸ்டாம் அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுந்தரவாண்டி பேருந்து நிறுத்தத்தில் இருந்து நெல்லிக்குப்பம் வரை கெடிலம் ஆறானது சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த 3 கிலோமீட்டர் தொலைவு இருக்கும் சாலை எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் பெயர் விலாசம் பற்றி யார் மூலமாக தெரியவந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் காலம் 5ல் எங்கிருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக தயாரித்து வைக்கப்பட்டிருந்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.